செய்தி வெளியீடு 32 நாள். 12.01.2017

# திருவள்ளுர் ஊராட்சி ஒன்றியம், விளாப்பாக்கம் கிராமத்தில், வேளாண்மைத்துறையினரால் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்ட நெல் அறுவடை செய்யப்பட்டு மகசூல் கணக்கீடு செய்யப்பட்டதை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.

~~~~~

திருவள்ளுர் ஊராட்சி ஒன்றியம், விளாம்பாக்கம் கிராமத்தில் வேளாண்மைத்துறையினரால் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்ட நெல் அறுவடை செய்யப்பட்டு மகசூல் கணக்கீடு செய்யப்பட்டதை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (12.01.2017) பார்வையிட்டார்.

விளாப்பாக்கம் கிராமத்தில் வேளாண்மைத்துறையினரால் இன்று 5X5 25 சதுர மீட்டர் நெற்பயிர்கள் அறுவடை செய்யப்பட்டு மகசூல் கணக்கீடு செய்யப்பட்டதில் 5.400 கி.கிராமாக பதிவுசெய்யப்பட்டது. பொதுவாக 16 கி முதல் 20கி வரை நெல் மகசூல் கிடைக்கும். இக்கிராமத்தில் 70ஹெக்டேர் சம்பா நெல் பயிரிடப்பட்டுள்ளது. ஒரு ஹெக்டேருக்கு 6,400 கி முதல் 8,000 கி வரை விளைச்சல் கிடைக்க வேண்டும். வர்தா புயல் பாதிப்பினால் ஹெக்டேருக்கு 2,160 கி மட்டுமே அறுவடை செய்ததில் கிடைத்துள்ளது. இக்காட்சியினை குறும்பதிவேட்டில் (Video) பதிவு செய்யப்பட்டுள்ளது. பிரதமமந்திரி பயிர் காப்பீடுத்திட்டத்தின்கீழ், மாவட்ட ஆட்சித்தலைவரால் நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தப் பணியாளர்களுக்கு இந்த ஆய்வின்போது, பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், இவர்களை கொண்டு மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் மகசூல் கணக்கீடு செய்யும் பணி மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மைத்துறை துணை இயக்குநர் திரு.எபினேசர், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளுர்.**
~~~~~